# நல்லியக்கோடனின் ஆளுமைப் பண்புகள்

**ச.சதானந்தவேல்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் உயராய்வு மையம்
ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை

**முனைவர் கரு.முருகன்**
உதவிப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

சங்கம் வைத்து தமிழைப் போற்றி வளர்த்தெடுத்த புலவர் பெருமக்களால் ஆய்ந்தெடுக்கப்பெற்ற மணிகளின் தொகுப்பே சங்க இலக்கியம் ஆகும். எட்டுத்தொகை நூல்களும் பத்து நெடும்பாடல்களுமே அம்மணிகள் ஆகும். பத்து நெடும்பாடல்களுள் ஒன்றான சிறுபாணாற்றுப்படையில் ஏழுநரம்புகள் கொண்ட யாழைமீட்டிப் பாடும் சிறுபாணன் என்னும் இசைக்கலைஞரை ஓவியர் குடியில் தோன்றி ஒய்மா நாட்டினை ஆண்டு வந்த நல்லியக்கோடன் என்னும் அரசன்பால் சென்று பரிசில் பெற்றுச் செல்லுமாறு ஆற்றுப்படுத்துவதாக அமைந்த நூல் ஆகும். இச்சிறுபாணாற்றுப்படை என்னும் நூலினை இருநூற்றி அறுபத்து ஒன்பது அடிகளால் இயற்றிய இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், நல்லியக் கோடனின் ஆளுமைப் பண்புகளாகக் கூறுவதனைக் காண்போம்.

## ஆளுமைப் பண்பு விளக்கம்

தனிமனிதன் ஒவ்வொருவரிடமும் ஒரு குறிப்பிட்டவகையில் அவனது மனப்பண்புகள் சேர்ந்து ஒருங்கமைந்து இருக்கும். இவ்வொருங்கமைப்பின் இயல்பு மனிதனுக்கு மனிதன் வேறுபட்டுக் காணப்படும். மனிதன் ஒருவன் தன்சூழ்நிலையில் எவ்வாறு செயல்படுகிறான் என்பது இவ்வொருங்கமைப்பின் தன்மையைப்பொறுத்து அமையும். இத்தகைய உடல் மனப்பண்புகளின் தனிப்பட்ட ஒருங்கமைப்பு ஒருவனது ஆளுமைப்பண்பு ஆகும். ஒரு தனிமனிதனுடைய எண்ணங்கள் செயல்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும்முறை, மனப்பான்மைகள், அவனுடைய வாழ்க்கைத்தத்துவம் அறிவாற்றல் உணர்ச்சிகள் ஆகிய யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் தனித்தன்மை ‘ஆளுமை’ எனப்படும் என வாழ்வியற்களஞ்சியம் (தொகுதி II) ஆளுமைப்பண்பு குறித்து விளக்கம் அளிக்கின்றது. ஆளுமைப்பண்பு ஒவ்வொருவருக்கும் தனித்தனிவிதமாக அமைவதால் பிறரது ஆளுமைப்பண்பு நலன்களில் இருந்து வேறுபடுகிறது, அது அவரது சிந்தனை, உணர்வுகள், நடத்தை அனைத்தையும் உள்ளடக்கியது. இப்பண்பானது உடனுக்குடன் மாறுபடுவதால் நெடுங்காலங்களுக்கு ஒருவரிடம் இடம்பெறக் கூடியதாகும். ஜெ.பி. வாட்சன் “நாம் எதனோடு தொடங்குகின்றோமோ அல்லது எதன்வழிவாழ்ந்து முடித்தோமோ அதன் விளைவே ஆளுமை” என்று கூறியுள்ளார்.

**விருந்தோம்பலின் பண்பு**

மாவிலங்கை என்ற தலைநகரில் அமர்ந்துகொண்டு ஒய்மா நாட்டினை ஆண்டுவந்த நல்லியக்கோடன் தன் அரண்மனை வாயிலை அடைந்த பாணர்களைத் தானே எதிர்சென்று அழைத்துவந்து, பாணரின் வறுமை நிலையினை மற்றவர்கள் அறியுமாறு திகழும் அவர்கள் உடுத்திய கந்தல் ஆடையினை நீக்கிச் செல்வச்சிறப்பினை உடையோர் அணியும் மூங்கிலின் உள்தோலை உரித்ததுபோன்ற தூய்மையான ஆடையினை உடுக்கச்செய்து பாணனின் மனதினை மகிழ்விப்பான். வெகுதொலைவில் இருந்து தன்னுடைய நாட்டிற்கு வருகைபுரிந்த காரணத்தினால் பாணனின் உடற்களைப்பு நீங்குவதற்காக, ஒருவன் உடலினில் பாம்பானது தீண்டினால் நஞ்சேறி மயங்குதல் போன்று களிப்புதரும் நல்ல கள்ளினைப் பாணர்களுக்குப் பருகக்கொடுத்து அவர்களின் உடற்களைப்பினை நீங்கச்செய்வான். பஞ்சபாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனனின் அண்ணன் ஆகிய வீமன் சமையற்கலையில் வல்லவனாக விளங்கியமையால் சுவையான உணவினைச் சுவைக்கும்போது நளபாகம், வீமபாகம் என்று குறிப்பிடுவர் என்பதால் வீமன் எழுதிச் சென்ற சமையல் நூலில் கூறியுள்ள விதிகளின்படி சமைத்த பல்வேறு வகையான சுவைபொருந்திய உணவினை,

**"காம்பு சொலித்தன்ன அறுவை உடீ,**

**……………………………**

**ஆன விருப்பின் தான் நின்று உளட்டி" (சிறு. பா. 235-245)**

எனும் அடிகள் சுட்டுகின்றன. இளம் கதிரவனைப் போன்று ஒளிவீசித் திகழ்கின்ற பொன்னால் செய்யப்பெற்ற பாத்திரத்தில் உணவினைஇட்டு பாணர்கள் விரும்பும் உணவினை அவர்களுக்கு அளித்து,பாணர்கள் மீது உள்ள விருப்பத்தின் காரணமாக நல்லியக்கோடனே பாணர்களின் முன்நின்று பாணர்களை உணவினை உண்ணுமாறு செய்வான்.

**அரசவையில் நல்லியக்கோடனின் குணநலன்**

நல்லியக்கோடன் அறிஞர், மறவர், மகளிர் பரிசிலர் எனப் பல்லோராலும் புகழ்ந்து பாராட்டப்பட்டமைக்குக் காரணமாக அமைவது இம்மன்னனிடம் அமைந்த குணநலன்கள் ஆகும். நல்லியக்கோடன்பால் விருப்பமுடையவர்களாய் அனைத்துக் காலங்களிலும் இம்மன்னனுடன் நெருங்கி வாழ்கின்ற சான்றோர்கள்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்நன்றி கொன்ற மகற்கு" (குறள் 110)**

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப நல்லியக்கோடனின் செய்நன்றி அறிதற் சிறப்பையும், உலக இயல்பிற்கு மாறான தவறான செயல்களைப் புரியும் சிற்றினத்தாரோடு சேராமல் உள்ள சிறப்பினையும், தனது அவைக்கு வருகைபுரியும் அனைவரிடத்தும் இன்முகத்துடன் நடந்து கொள்ளும் சிறப்பினையும் புகழ்கின்றனர். மேலும் தனது அரசவைக்கு வருகைபுரியும் பரிசிலர்கள் அறியாது தவறானவற்றை கூறுகின்ற பொழுதுகூட நல்லியக்கோடன் அத்தவற்றினை எடுத்துக்காட்டாமல் அறிந்தும் அறியாதவன் போன்று அவர்கள் கூறுவதனை விருப்பமுடன் கேட்டுக்கொள்வான். நல்ல அறிஞர்களிடம் அவர்கள் கூறுவதன் நுணுக்கங்களையும் கேட்டு அறிந்துகொள்ளும் அறிவுடையவனாகத் திகழ்கின்றான். தம்மிடம் பரிசில்பெறும் பரிசிலரின் சிறப்பினை அறிந்துகொண்டு அவர்களின் இயல்பிற்கேற்றார் போல் பரிசில் வழங்கும் தன்மையுடனும்,

**"செய்நன்றி அறிதலும் சிற்றினம் இன்மையும்**

**……………..**

**பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்த" (சிறு. பா. 207-219)**

நல்லியக்கோடனை நாடிப் பரிசில்பெற வருபவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்கு வேண்டும் பொருட்களை குறையாது வழங்கும் தன்மையினாலும் புலவர்களால் புகழ்ந்து பாடப்படும் குணமுடையவனாக திகழ்கின்றான்.

**நல்லாட்சி**

ஓவியர்குடியில் தோன்றிய நல்லியக்கோடன் ஒய்மான் நாட்டினை நன்மாவிலங்கை என்னும் நகரினைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். அவனது ஆட்சிக் காலக்கட்டத்தில் ஒய்மா

நாட்டில் உள்ள மக்கள் பெரும்முயற்சி இன்றியே அரிய பொருட்களையும் எளிதில் அடையும் வளங்களை தன்னுள் கொண்ட நாடாக விளங்குவதனை அறிந்த நன்னாகனார் அவர்கள்

**“சீறியாழ்**
**இல்லோர் சொல் மாலை நல்லியக்கோடனை**
**உடையை வாழி எற்புணர்ந்த பாலே**
**பாரிபறம்பின் பனிச் சுனைத் தெண்நீர்**
**ஓர் உளர் உண்மையின் இகழ்ந்தோர் போல**
**காணாது கழிந்த வைகல்காணா**
**வழி நட்கு இரங்கும் என் நெஞ்சம்” (புறம்.. 176 6-12)**

என்கிறார். பொருள் இழும்மென்ற ஓசையுடன் மலையிலுள்ள உயிரினங்களும் அதன்வழிச் செல்வோரும் உண்ணும் வகையில் சுவையான குளிர்ச்சி பொருந்திய நீரைத் தரவல்ல நீர்ச்சுனைகளைத் தன்னகத்தே கொண்டதாய் விளங்கும் மாவிலங்கை என்னும் நகரினை ஆட்சிபுரிந்து வரும் நல்லியக்கோடனின் நாட்டினை நீ அடைந்தாயானால் ஓரை விளையாட்டினை விளையாடும் மகளிர் பன்றியால் பாழ் செய்யப்பட்ட சேற்றினைக் கிளறி விளையாடும்போது ஆமை முட்டையும், ஆம்பர் கிழங்கும் அதுவாக வெளிப்படுவதனால் அதனை எளிதாகப்பெறுவர். ஒய்மான் நாட்டினைச் சார்ந்த மக்கள் பெருமுயற்சி இன்றியே அறியபொருட்களை பெறும் அளவிற்கு ஒய்மான் நாடு வளமுடன் விளங்கியதை உணரமுடிகின்றது. பாரியின் பறம்புமலையின் நீர்ச்சுனைகளைத் தேடி அலையாது தாம் இருக்கும் இடத்திலேயே இருந்து கொண்டு குளிர்ச்சி பொருந்திய சுவையான சுனைநீரினை அருந்துதல் போன்று நல்லியக்கோடனிடம் நான் கொண்ட நட்பு இன்றைய நாள் போன்று வரும் காலங்களிலும் அவனுடன் நட்புடன் விளங்கவேண்டும் என்றும் அவனைக் காணாத நாட்கள் தன் வாழ்நாளில் வீண்நாட்களாய் கழிந்தன என்றும் தனது நெஞ்சிடத்து கூறிச் செல்வதன்மூலம் நல்லியக்கோடன் நல்லாட்சி புரிந்துள்ளதை அறியமுடிகின்றது.

**கொடைப்பண்பு**

தமிழ்நாட்டில் இறைவனைப் போற்றுதல், இரவலர்களைப் பாதுகாத்தல், புலவர்களைப் பேணுதல், அ∴றிணை உயிர்களிடத்து இரக்கத்துடன் விளங்கிய கடையேழு வள்ளல்களாகிய பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரி என்னும் எழுவர் பூண்ட கொடையாகிய பாரத்தினை இவ்வுலகம் விளங்கும்படி தான் ஒருவனே மேற்கொண்டு தாங்கிய வலிமை மிகுந்த முயற்சியை உடையவன் நல்லியக்கோடன் ஆவான். இம்மன்னின் அரண்மனை வாயிலானது பொருநர், புலவர், அருமறை அந்தணர் முதலியோர் உள்ளே வருவதற்காக எப்பொழுதும் அடைக்கப்படாமல் திறந்தே காணப்படக்கூடியதாக விளங்கும். நல்லியக்கோடன் தன் நாட்டிற்குத் தன்னை விரும்பி வருகைபுரிந்த பரிசிலர், பாணர் போன்றோர்களை வறுமை என்னும் கொடிய நோயினைத் தீர்த்தவன் ஆவான். மேலும் தான் பகை அரசர்களுடன் போர்புரிந்து அவர்களிடம் இருந்து திறையாகப் பெற்ற பொருள்களுடன் பல்வேறு பொருட்களையும் பாணர்களுக்கு பரிசிலாக வழங்கக் கூடியவன். தனது அரசவைக்கு வருகைபுரியும் இரவலர்களை தனது கண்களால் பார்த்தவுடனே அவர்களது நிலையினை நன்கு உணர்ந்து பின்நாட்களில் அவர்களுக்குத் துன்பம் ஏற்படா வண்ணம் பொருட்களை வழங்கக்கூடியவன் நல்லியக்கோடன். மேலும் நல்ல வேலைப்பாடுடன் கூடிய தேர், தன்னுடைய ஓட்டத்தின் வேகத்தினால் குதிரையினையே பின்னடையச்செய்யும் வெள்ளை எருது, குதிரை, பல அணிகலன்கள் முதலானவற்றைப் பரிசில்களாக பாணனுக்கு வழங்கித் தன்னிடம் வந்த ‘அன்றே செல்க’ என்று பாணர்களுக்குப் பரிசில் வழங்கக் காலம் நீடிக்காத பண்புடையவன்.

**வீரம்**

நல்லியக்கோடனின் அரண்மனை வாயிலானது பொருநர், புலவர், அந்தணர் முதலானோர் வருகைக்காகவே எந்நேரமும் திறந்து காணப்படுமேதவிர, இம்மன்னின் பகைவர்கள் உள்ளே நுழைவதற்கு மிக அரிய வாயிலாகக் காணப்படும் என்று கூறுவதன்மூலம் நல்லியக்கோடனின் வீரத்தின் தன்மையின் சிறப்புபற்றிக் கூறும் நல்லூர் நத்தத்தனார்

**“…………….. வடுஇல் வாய்வாள்**
**உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமகன்” (சிறு. பா. 121-122)**

என்கிறார். இம்மன்னன் தனது பகைவர்களை அவர்களின் பின்புறம் நின்று தாக்காமல் போர் அறத்திற்கு ஏற்ப அவர்களின் முன்தோன்றி பகைவரின் மார்பிலும் முகத்திலும் வாளால் வெட்டி அவர்களை வீழ்த்துவதனால் தனது உணவிற்காக வேட்டையாடும் புலி போன்ற அஞ்சாமை பண்புடையவன் என்று வீரம் தொடர்பான பண்பினை வெளிப்படுத்துகின்றார்.

**முடிவுரை**

மாலிங்கை என்னும் நகரைத் தலைநகரமாகக் கொண்டு ஒய்மா நாட்டினை ஆண்டு வந்த மன்னர்களுள் ஓவியர் குடியில் பிறந்த நல்லியக்கோடன் என்னும் குறுநில மன்னனும் ஆண்டு வந்தான் என்பதையும் இம்மன்னனானவன் தன்னிடம் பரிசில்பெற்றுச் செல்லவரும் இரவலர்களுக்கு விருந்தோம்பல் புரியும் செயலினையும், அரசவையில் இருக்கும் பொழுதும் அவனது குணநலன்கள்பற்றி புலவர் பல்லோரால் புகழ்ந்து பாடப்பெற்றுள்ளன். இரவலர்களுக்கு விரைந்து பொருளதவி அளித்து அவர்களின் வறுமை நிலையினை விரட்டியடிக்கும் தன்மையுடனும் திகழ்கின்றான். இவனது நாட்டினில் உள்ள மக்கள் பெருமுயற்சி இன்றி அரிய பொருட்களைப் பெறும் அளவிற்கு வளங்களைக் கொண்டதாக நல்லாட்சிப் புரிந்துவந்துள்ளான். மேலும் போர் புரியும்பொழுதுகூட பகைவருடன் நேருக்கு நேர் நின்று போர்புரியும்தன்மை முதலான ஆளுமைப்பண்புகள் இம்மன்னிடம் காணப்படுதலை அறியமுடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1. வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 2.
2. சுந்தர சீனிவாசன், எஸ்., ஆளுமை மேம்பாடு.
3. பாலசுப்பிரமணியன், கு.வே, (உ.ஆ) புறநானூறு.
4. திருக்குறள், கௌமாரீஸ்வரி (ப.ஆ), பரிமேலழகர் உரை.